DINAKARAN 20 FEB 09

# ஈசா யோக மையத்தில் 23ல் மகாசிவராத்திரி விழா

கோவை,பிப்.20: கோவையை அடுத்த ஈசா யோக மையத்தில் மகாசிவராத்திரி விழா 23ம் தேதி மாலை 6 மணிமுதல் மறுநாள் அதிகாலை வரை நடக்கிறது. ஈஷா அறக்கட்டளை நிறுவனர் ஜக்கிவாசுதேவ் தலைமை வகிக்கிறார்.

கோவையை அடுத்த பூண்டி வெள்ளியங்கிரிமலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஈசா யோக மையத்தில் தொடர்ந்து 15 வது ஆண்டாக 23ம் தேதி மகாசிவராத்திரி விழா கொண்டாப்படுகிறது.

மாலை 6 மணிக்கு தியானலிங்க நாத ஆராதனையுடன் மகாசிவராத்திரி விழா துவங்குகிறது.

தொடர்ந்து சத்குரு அருளுரை, குருபூஜை, இன்னிசை நிகழ்ச்சிகள், மகா அன்னதானம், தியானம் நடக்கிறது. நள்ளிரவு சரியான 12 மணிக்கு மஹாமந்திர உச்சாடனை மற்றும் தீட்சை வழங்கும் நிகழ்ச்சி நடைபெறும். அதிகாலை வரை இன்னிசை நிகழ்ச்சி நடக்கிறது.

இந்தியன் ஓஷன், நாதப்பிரம்மா மற்றும் குண்டேசா சகோதரர்கள் மற்றும் சவுண்ட்ஸ் ஆப் ஈசா குழுவினர் இன்னிசை வழங்குகின்றனர்.

சினிமா பாடகி தீபன் சக்ரவர்த்தி, பாடகி ஸ்ரீலேகா ஆகியோரும் பாடுகின்றனர்.

இந்த ஆண்டு மகாசிவராத்திரி விழாவில் 3 ஆயிரம் வெளிநாட்டினர் உட்பட 6 லட்சம் தியான அன்பர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொது மக்களின் வசதிக்கான ஈசா யோகமைய வளாகத்திற்கு வெளியே 65 ஏக்கர் பரப்பளவிலும் நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நகரின் பல்வேறு இடங்களில் இருந்து பேருந்து வசதி மற்றும் விழா நடைபெறும் இடத்தில் விரிவான வாகன பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது. பெண்கள் குழந்தைகளுக்கு உதவும் வகையிலும், பிரசாதம் வழங்கவும், இருட்டுப்பள்ளதிலிருந்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் தன்னார்வ தொண்டர்கள் நியமிக்கப்பட உள்ளனர். இதை, ஈஷா அறங்காவலர் திலீப், திட்ட ஒருங்கிணைப்பாளர் சேகர், சுவாமி திரிதமா ஆகியோர் தெரிவித்தனர்.

நிர்வாகிகள் செல்வராஜ், பாலசந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.